## யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# பரிசளிப்பு விழா - 2015

## 2015.09.12

# அதிபர் அறிக்கை

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய வடமாகாணக் கல்வி,பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார கௌரவ அமைச்சர் உயர்திரு திரு.தம்பிராசா குருகுலராசா ஐயா அவர்களே, அவர்களின் பிரத்தியேகச் செயலாளர் திரு.A.K.சண்முகநாதன் அவர்களே, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர் திரு. சிவபாதம் நந்தகுமார் ஐயா அவர்களே, மற்றும் வடமராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திரு.அ.சிறீகரன்(கல்வி முகாமைத்துவம்) அவர்களே, திரு.யோ.ரவீந்திரன் (கல்வி நிர்வாகம்) அவர்களே, திரு.இ.தமிழ்மாறன் (திட்டமிடல்) அவர்களே, திருமதி.அ.பார்த்தீபன் (கல்வி அபிவிருத்தி) அவர்களே, கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலர் திரு.க.பொன்னையா அவர்களே, பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலர் திரு.ச.ஸ்ரீராமச்சந்திரன் அவர்களே, மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலர் திரு.ச.திரவியராசா அவர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, அயற் பாடசாலை அதிபர் அவர்களே,பாடசாலையின் அதிபர்களே, எமது பாடசாலையின் முன்னை நாள் அதிபர்களான திருமதி. L.N.யோசெப் அவர்களே, திருமதி. ந.சந்திரசேகரம் அவர்களே, ஆசிரிய ஆலோசகர்களே எமது பாடசாலையின் பிரதி அதிபர் அவர்களே, ஆசிரியர்களே கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே வடக்கு மாகாணசபை உறுப்பினர்களே, ஓய்வுநிலை உத்தியோகத்தர்களே, பாடசாலையின் அலுவலக ஊழியர்களே, பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவ சங்க உறுப்பினர்களே, மாணவர்களே, பெற்றோர்களே அனைவருக்கும் எனது உளம் கனிந்த காலை வணக்கங்கள்.

வடமராட்சிப் பிரதேசத்தின் புகழ்பூத்த பெண்கள் பாடசாலைகளில் ஒன்றான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 1868.05.07 இல் ஆரம்பிக்கப்பட்டு அகவை 147 ஐ எட்டியுள்ளது. நீண்ட வரலாற்றையும் பழம் பெருமைகளையும் கொண்ட எமது பாடசாலையின் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினரான கௌரவ அமைச்சர் உயர்திரு திரு.தம்பிராசா குருகுலராசா அவர்கள் வருகை தந்துள்ளார். அவர்களின் வருகை எமது பாடசாலையின் எதிர்கால விருத்திக்கான வெளிச்சமாக அமைய வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

அறிவுசார் பொருளாதாரத்துக்கான மானிட மூலதனத்தை உருவாக்கும் பிரதான இடமான பாடசாலையில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்காக அனைத்துப் பிள்ளைகளுக்கும் சம வாய்ப்புடன் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல், தரமான கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துதல், சமூகத்தினை பாடசாலையுடன் இணைக்கும் பாட மேம்பாட்டுத் திட்டத்தினை அமுல்படுத்துதல், பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பவற்றோடு கூடிய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. மேலும் பாடசாலைக் கல்வியைப் பெறுகின்றவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையில் பாடசாலைத் தேவைகளை இனங்கண்டு, திட்டமிடுதலின் ஊடாக விளைதிறன் மிக்க பாடசாலையாக உருவெடுக்க வேண்டும் என்பதே எமது பாடசாலைச் சமூகத்தின் குறிக்கோள் ஆகும்.

கல்வி, எமது கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாப்பதாக இருப்பதோடு, தேசிய மற்றும் சர்வதேச எதிர்பார்ப்புக்களுக்கேற்ப நம் மாணவர்களை பயிற்றுவிக்கும் நோக்கில் ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகள் தோறும் ஆங்கிலமொழி, சிங்களமொழி வகுப்புக்கள் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றன. மேலும் இடைநிலை வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் என்பன ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

## முகாமைக்குழு :

பாடசாலை அதிபருடன் இணைந்து திருமதி.ஈ.குட்டித்தம்பி பிரதி அதிபராகவும், பகுதித் தலைவர்களான செல்வி.ம.கணேஸ் (உயர்தரப் பிரிவு) மற்றும் திரு.சி.கிருஸ்ணராஜா(இடைநிலைப்பிரிவு), செல்வி.அ.விசாகப்பெருமாள் ( இடைநிலைப்பிரிவு), திருமதி. சி.கமலசிங்கம் (ஆரம்பப்பிரிவு) ஆகியோர் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தனர். மேலும் பாட இணைப்பாளர்களான திருமதி.நா.ஸ்ரீரங்கநாதன், திருமதி.ஆ.சிவகுமாரன், திரு.சு.சிவலிங்கம், திருமதி. பு.வெங்கடேஸ்வரன், திருமதி.ச.மகாராசா, திருமதி.சி.கிருஸ்ணகுமார், திருமதி. வி.இராஜேந்திரம், செல்வி.யோ.வல்லிபுரம், திருமதி.ம.தங்கவேல் ஆகியோரும் இணைந்து பாடசாலை நிர்வாகத்தினை செயலாற்றல் மிக்கதாகச் செயற்படுத்தி வருகின்றனர். மேலும் இக்காலப் பகுதியில் திருமதி.நவமணி சந்திரசேகரம் அவர்கள் எமது பாடசாலையில் அதிபராக குறுகிய காலம் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியவளம் :

எமது பாடசாலையின் சாதனைகளின் காரண கர்த்தாக்களாக எமது ஆசிரியர்கள் அமைகின்றனர். தமக்கு பணிக்கப்படும் கடமைகளையும் பொறுப் புக்களையும் இன்முகத்துடன் ஏற்று அர்ப்பணிப்புடன் அயராது உழைக்கும் அவர்களுக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது. இக் காலப்பகுதியில் 58 ஆசிரியர்கள் சேவையாற்றியுள்ளனர்.

| ஆசிரிய வகை | எண்ணிக்கை |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 37 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 17 |
| இணைப்பிலுள்ள ஆசிரியர் | 01 |
| முகிழ்நிலை ஆசிரியர் | 02 |
| பகுதிநேர ஆங்கில ஆசிரியர் | 01 |

கடந்த காலங்களில் ஆங்கில ஆசிரியர், பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. எனினும் அண்மைக்காலங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் அப்பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி எமக்கு முகிழ்நிலை ஆசிரியர்களை வழங்கி வருகின்றது. அந்தவகையில் திரு.ம.தினேஸ், செல்வி.சு.நவரட்ணராஜா அவர்கள் வழங்கிய சேவையை நாம் இன்முகத்துடன் ஏற்பதுடன் கல்வியற் கல்லூரியின் அதிபர் திரு.ச.அமிர்தலிங்கம் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இக்காலப் பகுதியினுள் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களான திருமதி. க.கைலாசநாதன், திருமதி.ம.அசோகலிங்கம், திருமதி.ஞா.கிருபாகரன் திருமதி.ரா.சுரேஸ்ராம், செல்வி. தி.தர்மரட்ணம், செல்வி.கா.சிவராசா மற்றும் வேறு பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்தவர்களான திரு.பா.பிரதீபன், திருமதி.சி. சிறீகணேசன், திருமதி.நி.துஸ்யந்தன், திருமதி.ரா.ரவீந்திரன், திருமதி.ஆ.சிவகுமாரன், திருமதி.பு.வெங்கடேஸ்வரன், திரு.இ.ராகவன்,திருமதி.சு.சதீஸ்வரன், திருமதி.இ.பாலகிருஸ்ணன், திருமதி.ம.சிவராஜா, திருமதி.வி.பகீரதன்,திருமதி.தீ.செந்தில்குமரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

## கல்விசாரா ஊழியர்கள் :

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| முகாமைத்துவ ஊழியர் | 01 |
| நூலக உதவியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர்கள் | 03 |
| இரவுநேரக் காவலாளி | 01 |
| சுகாதாரத் தொழிலாளி | 01 |

திருமதி.பு.தயாபரன், திருமதி.உ.யசிதரன், திரு.கே.கிருபாகரன், திருமதி.ஜெ.குணேஸ்வரன், திரு.க.ஆனந்தராசா, திரு.அ.கலிஸ்ரன், திரு.கி.கிருஸ்ணதாஸ் ஆகியோர்கள் பாடசாலையின் நிர்வாகத்திற்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக நின்று தமது நிறைவான சேவையை வழங்குகின்றனர். தற்சமயம் முகாமைத்துவ உதவியாளர் திருமதி.பு.தயாபரன், சுகாதாரத் தொழிலாளி திரு.அ.கலிஸ்ரன் ஆகியோர் இடமாற்றம் பெற்றச் சென்றுள்ளனர்.

## மாணவ வளம் :

எமது பாடசாலையின் ஊட்டற் பிரதேசங்களாக உடுப்பிட்டி, இமையாணன், வல்வெட்டித்துறை, கம்பர்மலை, கரணவாய், தொண்டமனாறு என்பன அமைந்துள்ளன. எமது கல்லூரியில் 1002 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

| பிரிவு | எண்ணிக்கை |
|---|---|
| ஆரம்பப்பிரிவு | 312 |
| கனிஸ்ட இடைநிலைப்பிரிவு | 519 |
| சிரேஸ்ட இடைநிலைப்பிரிவு | 171 |

## பௌதிக வளம்

நவீன கல்விச் சிந்தனைகளில் மாணவர்களின் வரவு, அடைவு மட்டத்தின் உயர்வான பெறுபேறு என்பவற்றிற்கு பாடசாலையின் கவின்நிலை மற்றும் பௌதிகவளங்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. மாணவர்களை தம்பால் ஈர்க்கும் வண்ணம் பாடசாலையின் பௌதிகவளங்கள் அமைய வேண்டும். அவ்வகையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்ற எமது பாடசாலையில் பௌதிக வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது. பற்றாக்குறையான பௌதிக வளங்களாகப் பின்வருவன அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. ஆரம்பப் பிரிவு மாணவர்களிற்கான கணினிச்செயற்பாட்டறை மற்றும் நூல் நிலையம்.
2. கனிஸ்ட, இடைநிலை மாணவர்களுக்கான கணினி ஆய்வுகூட உபகரணங்கள்.
3. கனிஸ்ட, இடைநிலை மாணவர்களுக்கான பொது விஞ்ஞான ஆய்வுகூடம்.
4. விளையாட்டு உபகரணங்களைப் பேணும் களஞ்சிய அறையுடன் கூடிய உள்ளக விளையாட்டு அரங்கு.
5. ஆங்கிலமொழி மூல மற்றும் தொகுதிப்பாடங்கள் கற்பிப்பதற்கான வகுப்பறைகள்.

அதிகளவிலான பெருவிளையாட்டுக்களில் எமது மாணவிகள் பங்குபற்றிய போதிலும் முறையான பயிற்சியை வழங்கக்கூடியவிதமாக உள்ளக விளையாட்டு அரங்கோ அல்லது அதற்கான அறையோ இன்மையால் பூப்பந்து, கரம், சதுரங்கம் போன்ற விளையாட்டுக்களில் தீவிரமான பயிற்சி வழங்கமுடியாதுள்ளது. ஆதலால் மாண்புமிகு கௌரவ கல்வி அமைச்சர் அவர்களை எமது பாடசாலையில் அக்கறை கொண்டு உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றினையோ அல்லது அறை ஒன்றினையோ அமைப்பதற்கு ஆவன செய்து தருமாறு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

## கல்விச் செயற்பாடுகள் :

### 2014 ஆம் ஆண்டிற்கான பொது பரீட்சைப் பெறுபேறுகள்

### தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

| சித்தி பெற்ற மாணவர் விபரம் | புள்ளிகள் |
|---|---|
| செல்வி.சி.விதுஷிகா | 170 |
| செல்வி.அ.அகல்விழி | 167 |
| செல்வி.ர.பிரலகஷ்ணா | 164 |
| செல்வி.வி.யுவர்ணா | 156 |
| செல்வி.ம.நித்தனா | 153 |

| | |
|---|---|
| தோற்றியோர் | 62 |
| சித்திபெற்றோர் | 05 |
| 100 புள்ளிகளுக்கு மேல் | 42 |
| 70 புள்ளிகளுக்கு மேல் | 06 |

### க.பொ.த [சாதாரண] தரப் பரீட்சை

| | மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 1. | செல்வி.செ.வினோதினி | 8 | 1 | | |
| 2. | செல்வி.ப.சௌர்ந்தர்யா | 8 | 1 | | |
| 3. | செல்வி.பா.பவித்திரா | 7 | 2 | | |
| 4. | செல்வி.சி.பவநிதா | 7 | 2 | | |
| 5. | செல்வி.நி.நர்மினி | 6 | 3 | | |
| 6. | செல்வி.சு.கயந்தி | 6 | 1 | 2 | |
| 7. | செல்வி.இ.அஸ்வினி | 6 | 1 | 1 | 1 |
| 8. | செல்வி.த.மிதுலா | 5 | 2 | 2 | |
| 9. | செல்வி.கி.நிலக்ஷி | 5 | 1 | 3 | |
| 10. | செல்வி.சு.நிவேதா | 5 | 1 | 3 | |

| தோற்றியோர் | க.பொ.த உயர்தரம் கற்க தகுதி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|
| 67 | 40 | 60 |

**க.பொ.த [ உயர்] தரப் பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றோர்**

**விஞ்ஞானப்பிரிவு :**

1. செல்வி.தெ.குலாங்கனா - Envirnmental Consavation & Management
2. செல்வி.ச.கஜீவா - Agriculture science
3. செல்வி.வி.தனுஜா - Sidha Medicin

**கலைப்பிரிவு :**

1. செல்வி.ந.நர்த்தனா - Management in Information Technology (MIT)
2. செல்வி.ஜெ.தசாந்தினி - Arts
3. செல்வி.இ.மைதிலி - Arts
4. செல்வி.சி..ஜீவந்திக்கா - Arts

## இணைப்பாடவிதான செயற்பாடுகள் :

2014 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ( பொது முகாமைத்துவம்) திரு.அழகையா சிறரன் அவர்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தார். விளையாட்டு ஆசிரியைகள் திருமதி. அன்னராணி பாஸ்கரன், செல்வி.திருநிறைச்செல்வி தர்மரட்ணம் ஆகியோரின் முயற்சியால் எம் மாணவர்கள் மாகாண, தேசிய மட்டத்தில் சாதனைகள் படைத்தனர்.

15 வயதுப் பிரிவு செல்வி.அபிநயா அருளானந்தசிவம் 100 m, 200 m ஓட்டப் போட்டிகளில் முதலாவது இடத்தினைப் பெற்று தடகள முதன்மை வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார். 17 வயதுப் பிரிவில் செல்வி.ஆரணி சிவகுமாரன் நீளம் பாய்தல் நிகழ்வில் 4.93 மீற்றர் தூரத்தினைப் பாய்ந்து மாகாண மட்டத்தில் சாதனையை முறியடித்து முதலாவது இடத்தினை தட்டிக் கொண்டதுடன் 100 m, 200 m ஓட்டப் போட்டிகளில் முதலாவது இடத்தினையும் பெற்று தடகளப் போட்டியில் முதன்மை வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டத்தக்கதாகும். மேலும் 4 x 400 m அஞ்சல் நிகழ்வில் மாகாண மட்டத்தில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் எமது பாடசாலை முதலாவது இடத்தினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. கரப்பந்து, எறிபந்து, பூப்பந்து, சதுரங்கம், கரம் போன்ற பெருவிளையாட்டுக்கள் மாகாண மட்டத்தில் பங்குபற்றினர். சதுரங்க விளையாட்டுப் பயிற்றுனர் திரு.ரி.இராஜசிங்கம் அவர்கள் தொடர்ச்சியாக எமது மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருகின்றார். அவரது தன்னலமற்ற சேவை பாராட்டத்தக்கது. அத்துடன் 15 வயதுப் பிரிவு சதுரங்கக்குழு வலய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**பெருவிளையாட்டுக்கள் :**

### 19 வயதிற்குட்பட்டோர்

| நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் |
|---|---|---|
| எறிபந்து | 1 | 3 |
| கரப்பந்து | 2 | |
| பூப்பந்து | 2 | |

### 17 வயதிற்குட்பட்டோர்

| நிகழ்ச்சி | வலயம் |
|---|---|
| வலைப்பந்து | 3 |
| கரப்பந்து | 3 |

### 15 வயதிற்குட்பட்டோர்

| நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் |
|---|---|---|
| வலைப்பந்து | 2 | |
| கரப்பந்து | 1 | 2 |
| கரம் | 2 | |

### வலய மட்ட சதுரங்கப் போட்டி

| பெயர் | பிரிவு | நிலை |
|---|---|---|
| செல்வி.சி.சுமித்தா | 15 | 1 |
| செல்வி.கு.டர்மி | 15 | 1 |
| செல்வி.பி.நதுஷா | 9 | 1 |

பாடசாலைகளுக்கிடையிலான போசணை மாதம் தொடர்பான போட்டியில் வலய மட்டத்தில் எமது பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**தமிழ் தினப் போட்டி**

| பிரிவு | பெயர் | நிகழ்வு | வலயம் |
|---|---|---|---|
| III | செல்வி.அ.நிந்துஷா | தனிநடனம் | I |
| IV | செல்வி.சி.ஆரணி | தனிநடனம் | I |
| V | செல்வி.சி.அபிநயா | தனிநடனம் | I |
| குழு | | நாட்டிய நாடகம் | I |

**தேசிய நடனவிழா நிகழ்வு**

| பிரிவு | நிகழ்வு | மாகாண | தேசியம் |
|---|---|---|---|
| பாலர் | கும்மி | I | I |
| II | நடனஅஞ்சலி | I | |
| II | பாரதியார் | I | |
| IV | ஒயிலாட்டம் | I | |
| V | ஏந்தல் நடனம் | I | I |

**ஆங்கிலதினப் போட்டி**

| தரம் | பெயர் | நிகழ்வு | வலயம் |
|---|---|---|---|
| 4 | செல்வி.ஜெ.லவீனா | கவிதைகூறல் | I |
| 6 | செல்வி.க.நிலானி | கவிதைகூறல் | I |
| 8 | செல்வி.கி.தனபைரவி | கவிதைகூறல் | I |
| 4 | செல்வி.க.கபிஷா | உறுப்பெழுத்து | I |
| 5 | செல்வி.ர.அஸ்வினி | உறுப்பெழுத்து | I |

**விஞ்ஞான புதிர்ப்போட்டி – தமிழ்மொழி மூலம்**

| தரம் | பெயர் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|
| 6 | செல்வி.சோ..உ மாகௌரி | 1 | 2 |
| 8 | செல்வி.கா.அபிஷா | 2 | 1 |
| 9 | செல்வி.சி..யஸ்மியா | 2 | |

**கணித புதிரப் போட்டி – தமிழ்மொழி மூலம்**

| தரம் | பெயர் | வலயம் |
|---|---|---|
| 11 | செல்வி.பா.பவித்திரா | 2 |

**கணித புதிர்ப்போட்டி – ஆங்கிலமொழி மூலம்**

| தரம் | பெயர் | வலயம் |
|---|---|---|
| 6 | செல்வி.ர.கீதாஞ்சலி | 2 |
| 7 | செல்வி.ச.தனுஸ்கா | 2 |

**சமூகவிஞ்ஞானபோட்டி**

| தரம் | பெயர் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|
| 8 | செல்வி.கா.அபிஷா | 1 | |
| 9 | செல்வி.யோ.பிருந்தா | 1 | |
| 10 | செல்வி.ச.மதுஷியா | 1 | 3 |
| 9 | செல்வி.வி.நிஷாஜினி | 3 | |

வலயமட்ட புத்தாக்கப்போட்டி தரம் 9 செல்வி.ச..தனுசா வலய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாகாண மட்டத்தில் பங்குபற்றியுள்ளார்.

வலய மட்ட இரண்டாம் தேசிய மொழி சிங்களம் Writing Language Skill மதிப்பீட்டுப் போட்டியில் செல்வி.ந.கடல்நிலா ( தரம் 9) மூன்றாமிடம் பெற்றுள்ளார்.

இலங்கை தரக்கட்டுப்பாட்டு சபையால் 50 ஆவது நிறைவை ஒட்டிய " அறிவை அளவிடுதல்" (வினாவிடை) போட்டியில் தேசிய மட்டத்தில் செல்வி தர்சினி நகுலேஸ்வரன் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

வலய மட்ட நூலக வாரத்தை ஒட்டிய போட்டியில் நூலகப் போட்டியில் வலயமட்டத்தில் பாடசாலை இரண்டாமிடத்தையும், வாசிப்போம் வெல்வோம் போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

**மன்றங்களின் செயற்பாடுகள் :**

எமது கல்லூரியில் புதன்கிழமை தோறும் வகுப்பாசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள் என்போரின் வழிகாட்டல்களுடன் இடம்பெறும் மாணவ மன்ற செயற்பாடுகள் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்கள் தலைமைப்பண்புகள், ஆளுமை விருத்தி என்பனவற்றை வெளிக்கொணர்வதாக அமைகின்றன. மன்றச் செயற்பாடுகள் ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு என வெவ்வேறாக நடைபெறுகின்றன.

ஆங்கில மன்றச் செயற்பாடுகள் ஆங்கில ஆசிரியர்களான திருமதி.நா.ஸ்ரீரங்கநாதன், திருமதி.ரா.ரவீந்திரன், திருமதி.த.ஜெயக்குமார், செல்வி.சி.சிவபானுகா ஆகியோர்களின் வழிகாட்டலூடாக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மேலும் சுகாதார மன்ற செயற்பாடுகளும் பாராட்டக்கூடிய வகையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. டெங்கு, போதைவஸ்து பாவனை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்குதல் போன்ற செயற்பாடுகளை எமது பிரதேச சுகாதார பரிசோதகர் திரு.என்.பிரபாகரன் அவர்களின் பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் இந்து மன்றத்தினால் நடத்தப்படும் வாணிவிழா நிகழ்வுகள், கிறிஸ்தவ ஒன்றியத்தினால் நடைபெற்று வரும் ஒளிவிழா நிகழ்வுகள், பஸ்கா ஆராதனைகள் என்பனவும் குறிப்பிடத்தக்கன.

**மன்றங்களும் பொறுப்பாசிரியர்களும்.**

| | |
|---|---|
| இந்துமாமன்றம் | திரு.த.சிவகுமார் |
| தமிழ்மன்றம் | திருமதி.பு.வெங்கடேஸ்வரன் |
| ஆங்கில மன்றம் | திருமதி.நா.ஸ்ரீரங்கநாதன் |
| கணித விஞ்ஞான மன்றம் | திரு.கு.மனோகரன் |
| | திரு.சு.சிவலிங்கம் |
| கிறிஸ்தவ மன்றம் | திரு.அ.யோகேந்திரன் |
| சமூகவிஞ்ஞான மன்றம் | திருமதி.இ.பாலகிருஸ்ணன் |
| சுகாதார மன்றம் | செல்வி.ர.கதிரவேல் |
| விளையாட்டுகழகம் | திருமதி.அ.பாஸ்கரன் |

**சாரணியம் :**

கல்லூரியின் சாரணிய செயற்பாடுகள் செல்வி.ல.விஜயகௌரி ஆசிரியையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சாரணிய செயற்பாடுகளின் விரிவாக்கத்திற்கான நடவடிக்கைகள் மேலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :**

பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாடசாலை நிர்வாகத்துடன் ஒன்றினைந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு வருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வலயப் பிரதிநிதியான பிரதிக்கல்விப் பணிப்பாளர் ( கல்வி முகாமைத்துவம்) திரு.அ.ஸ்ரீகரன் அவர்கள் கடமையாற்றுகின்றார். பாடசாலையின் அதிபர் தலைமையில்

| | |
|---|---|
| செயலாளர் (பெற்றார்) | திரு.க.நாகநாதன் |
| பொருளாளர்(ஆசிரியர்) | திருமதி.ப.அருள்மகேஸ்வரன் |
| உறுப்பினர்கள்(பெற்றரர்) | திரு.சி.பரமேஸ்வரன் |
| | திரு.இ.ஞானேந்திரன் |
| | திரு.க.குகேந்திரன் |
| பெற்றார் | திரு.நா.மகேந்திரராஜா |
| உபஅதிபர் | திருமதி.ஈ.குட்டித்தம்பி |
| ஆசிரியர்கள் | திரு.த.சிவகுமார் |
| | திரு.கு.மனோகரன் |
| | திரு.சு.சிவலிங்கம் |
| | திரு.மா.வசந்தருபன் |
| பழையமாணவர்கள் | திருமதி.L.N.யோசெப் |
| | திருமதி.ரே.ராமதாஸ் |

ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது பதவிக்காலத்தில் ஆற்றிய சேவைகள் குறிப்பிடத்தக்கன.

1. ஆரம்பப்பிரிவிலுள்ள எட்டு வகுப்பறைகள் பெற்றார்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் களின் அனுசரணையுடன் மின்சார இணைப்பு வழங்கியமை.
2. விஞ்ஞான ஆய்வுகூடப் புனரமைப்புச் செயற்பாடுகள் மேற்கொண்டமை, ஆய்வுகூட உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தமை.

3. விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தமை.
4. சுற்றுச்சூழல் பராமரிப்பு, மற்றும் சிரமதானம் மேற்கொண்டமை.
5. வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி, வருடாந்த பரிசளிப்பு விழா என்பவற்றுக்கான பரிசுகள், சிற்றுண்டிச் செலவுகளைப் பொறுப்பேற்றமை.

## பழைய மாணவர் சங்கம் :

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், தாய்ச்சங்கம் திருமதி. L.N.யோசெப் அவர்களைத் தலைவராகவும் திருமதி.க.தேவராஜா அவர்களை செயலாளராகவும் திருமதி.ரே.ராமதாஸ் அவர்களை பொருளாளனவும் கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றி வருகின்றது. கனடா, சுவிஸ்லாந்து, லண்டன், அவுஸ்திரேலியா என்பவற்றில் வாழ்கின்ற பழைய மாணவர்களின் ஒத்துழைப்பும் நிதி உதவியும் தாய்ச்சங்கத்தின் பணிகளுக்கு உறுதுணையாக அமைகின்றன.

பாடசாலையின் பௌதிக பண்பாட்டு வள அபிவிருத்தி மாணவர்களில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன அதிக கரிசனை காட்டுவதோடு பாடசாலையின் பாரம்பரிய கலாசாரம் என்பவற்றை பேணுவதில் அதீத அக்கறை காட்டி வருகின்றனர்.

ஆசிரிய வளம் இல்லாத பாடங்களிற்கான ஆசிரியர்களை குறைந்த வேதனத்தில் அமர்த்தி அவர்களின் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றனர். ( கிறிஸ்தவ பாடம், நாடகமும் அரங்கியலும், மெல்லக் கற்போருக்கான ஆசிரியர்)

வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கான வெற்றிக்கிண்ணம் வழங்குவதுடன் விளையாட்டு உபசரணைச் செலவுகளையும், மாகாண, தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு கொள்கின்ற மாணவர்களுக்கான போக்கு வரத்துச் செலவுகள் என்பவற்றையும் வழங்கி வருகின்றது.

மேலும் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது மாணவர்களுக்கான பரிசில்களையும் பழைய மாணவர்கள் வழங்கி வருகின்றனர். அந்தவகையில்...

1. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான வெற்றிக் கேடயம் பழைய மாணவர[redacted]ான [illegible], [illegible] ர், திருமதி.L.N.யோசெப் [illegible] வழங்கி கௌரவிக்கின்றனர்.
2. க.பொ.த(சாதாரண) தரப் பரீட்சையில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகளுக்கான பணப் பரிசில்களை முன்னை நாள் அதிபர் திருமதி.கி.மதியாபரணம் நினைவாக வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.
3. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களுக்கான பணப் பரிசில்களை முன்னைநாள் அதிபர் செல்வி.R.J.Maan, அமரர் பேராசிரியர் அ.துரைராஜா ஆகியோரின் நினைவாக வழங்கப்படுகின்றது.
4. ஆங்கில பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த மாணவிக்கான பரிசினை முன்னை நாள் அதிபர் திருமதி.க.ரட்ணசாமி நினைவாக வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.
5. பாடசாலையில் சிறந்த மாணவிக்கான கேடயம் முன்னை நாள் அதிபர் செல்வி.லீவன்னியசிங்கம் நினைவாக வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

மேலும் பல்கலைக்கழகம் செல்கின்ற வறிய மாணவர்களுக்கான பரிசு சமூகச் சுடர் திரு.பாஸ்கரன் அவர்களால் இந்திராணி பாஸ்கரன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது.

**வலயக் கல்வி பணிமனையினால் பாடசாலையின் பௌதிக வள விருத்தி தொடர்பாக வழங்கப்பட்ட நிதி பங்களிப்பு :**

1. E.K.S.P செயற்றிட்டத்தின் கீழ் மலசலகூடகுழி அமைப்பதற்கான நிதி ரூ100000/=.
2. ஒன்றுகூடல் மண்டபம் புனருத்தாரணம் ரூபா 343061.15.

**புலமைப்பரிசல்கள் :**

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்காக நலன்விரும்பிகளால் பின்வரும் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

1. ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக N.C.C புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 10 மாணவர்கட்கு தலா 500.00 மாதாந்தம் ரூபா 5000.00 வழங்கப படுகின்றது. இதனை கனடாவில் வாழ்கின்ற புலம் பெயர்ந்த நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்களால் வழங்கப்படுகின்றது.
2. கனிஸ்ட, இடைநிலை வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தலா ரூபா 100.00 வீதம் 10 மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 1000.00 வை சமூகச்சுடர் திரு.பாஸ்கரன் அவர்கள் வழங்கி வருகின்றார்.
3. க.பொ.த ( உயர்தர) வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் தலா ரூபா 1000.00 வீதம் மாதாந்தம் ரூபா 4000.00 வழங்கப்படுகின்றது. இதனை அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற திரு.எம்.சுவேந்திரன் அவர்கள் வழங்கி வருகின்றார்.

**அன்பளிப்புக்கள் :**

| விபரம் | உபகரணம் | தொகை |
|---|---|---|
| *கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்*<br>1. மாவை சேனாதிராசா<br>2. அப்பாத்துரை விநாயகமூர்த்தி | விஞ்ஞான ஆய்வுகூட உபகரணம்<br>விளையாட்டுஉபகரணம் | 100000.00<br>50000.00 |
| *வடக்கு மாகாணசபை உறுப்பினர்*<br>1. திரு.M.K.சிவாஜிலிங்கம்<br>2. திரு.எஸ்.சுகிர்தன் | விஞ்ஞான ஆய்வுகூட உபகரணம் | 100000.00<br>50000.00 |

| அன்பளிப்புச் செய்தோர் விபரம் | பொருள் விபரம் |
|---|---|
| 1. சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை<br>2. ஸ்ரீரங்கன் ரெக்ஸ்சைல்<br>3. ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்<br>4. பீக்கன் ரியூசன் சென்ரர் | Green Board - 4 |
| 1. திரு & திருமதி.சித்திரவேல்<br>2. திரு.நா.தவநேசன்<br>3. திருமதி.சங்கீதா பரோடன் | விஞ்ஞான ஆய்வுகூட மேசை ( 6' x 4') |
| 1. சந்திரசேகர வீரகத்திப்பிள்ளையார் கோவில் | Dustbins |
| 1. மதூசன் ஸ்ரோர்ஸ் | பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கான உபகரணம் (ரூபா 20000.00) |
| 1. எமால்ரட் ஹட்வெளர் ஸ்ரோர்ஸ் | Gas Cylinder |
| 1. பிரியங்கா ஸ்ரோர்ஸ்<br>2. காந்தன்கடை<br>3. குருநாதர் ஸ்ரோர்ஸ்<br>4. S.R.பாமசி<br>5. கிருபா கடை<br>6. திருமதி.அம்பிகைபாகன்<br>7. SMA Printers<br>8. நிதுஷன் ஸ்ரோர்ஸ்<br>9. முருகேசு கண்மணி<br>10. துரைசிங்கம் வீரசிங்கம்<br>11. வசந்தம் நெற்கபே<br>12. இனியபுதுமைப்பொருளகம்<br>13. சுமன் வீடியோ<br>14. திருத.சதாசிவம்<br>15. திரு.த.வேதவனம்<br>16. ஆண்டவன் றில்லர்ஸ்<br>17. திருஆ.லோகோஸ்வரன்<br>18. திருமதி.க.அருள்பாமா<br>19. திரு.க.நாகநாதன்<br>20. திரு.ப.சிவகுகராசா<br>21. திரு.சு.கிருஸ்ணலிங்கம்<br>22. திரு.மு.ஜெகநாதன்<br>23. திரு.மா.அசோக்குமார்<br>24. தாய் சேய் பான்சியகம்<br>25. ஷோபி மினி மாக்கற்<br>26. திருமதி.வ.சிவகுமார் | ஆரம்பபிரிவு வகுப்பறைகளுக்கு மின்னினைப்பு செய்வதற்கு உதவிபுரிந் தோர். (ரூபா 60000.00 பெறுமதியான பொருட்களும் மற்றும் திரு.சி.பரமேஸ்வரன் தலைமையிலான சரீர உதவியும் ) |

1 / 2585

3130
3316

3130 - 4623